1973 டிசம்பர் 3]

ஆசிரியர்களுக்கான தேசிய விருதுகள்

***571 வினு—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1972-73-ம் ஆண்டில் ஆசிரியர்களுக்கான தேசிய விருதுகள் தமிழகத்தில் எத்தனை பேருக்கு யார், யாருக்கு வழங்கப்பட்டன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: 1972-73-ம் ஆண்டில் ஆசிரியர்களுக்கான தேசிய விருதுகள், 6 ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும், 3 உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டன— அவர்களின் பெயர்கள் வருமாறு:—

1. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள்—

(1) திரு. வி. கே. குணசீலம், ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய (சிறுவர்கள்) நடுநிலைப்பள்ளி, சின்னுளப்பட்டி, மதுரை மாவட்டம்.

(2) திரு. எஸ். ராஜன், தலைமையாசிரியர், திரு. ராம கிருஷ்ண வித்யாலயா ஆரம்பப்பள்ளி, காடுப்பட்டி அஞ்சல், மதுரை மாவட்டம்.

(3) சகோதரி ஆர். அன்னமேரி, தலைமை ஆசிரியை மற்றும் தாளாளர், புனித பிலோமினுள் ஆரம்பப்பள்ளி, திண்டிவனம், தென்னுற்காடு மாவட்டம்.

(4) திரு. எல். வீரப்பன், தலைமையாசிரியர் (தேர்வுநிலை ஸ்ரீ ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி, காரயாம்புத்தூர் அஞ்சல், நாமக்கல் தாலூகா.

(5) திருமதி எஸ். தனபாக்கியம், இளநிலை ஆசிரியை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கடம்பர்கோவில், குளித்தலை தாலூகா, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(6) திரு. எஸ். சுப்ரமணியம், ஆசிரியர், சத்திரிய நாடார் ஆரம்பப்பள்ளி, கமுதி, ராமநாதபுரம்.

2. உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்—

(1) திரு. ச. டி. எட்வர்டு ஜானதன், தலைவர், விழி யிழந்தோர்பள்ளி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.

(2) திரு. ஓ. வி. கோபாலன், தலைமை ஆசிரியர், திரு. ராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி, தியாகராயநகர், சென்னை-17.

(3) திரு. பி. ராதாகிருஷ்ணன், தலைமையாசிரியர், தேவாங்கர் உயர்நிலைப்பள்ளி, சின்னாளப்பட்டி, மதுரை மாவட்டம்.

திரு. என். கிட்டப்பா : எந்த அடிப்படையில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன என்பதையும் இப்படி விருது பெற்றவர்களில் தமிழ் ஆசிரியர்கள் யாரேனும் உள்ளனரா என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் அந்தக் கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட கல்வி அதிகாரி மற்றும் இரண்டு அதிகாரிகள் இருந்து இரண்டு இரண்டு பேர்களைத் தேர்ந்தெடுத்து மாநில அளவில் அனுப்புகிறார்கள். நாற்பத்தைந்து கல்வி மாவட்டங்களிலிருந்து வருகிற 90 பேர்களிலிருந்து இங்கு மாநில கல்வி இயக்குநரும், சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களும், என். கே. டி. ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி முதல்வராக இருக்கிற செல்வி. சரோஜினி இம்மூன்று பேர்களும் கொண்ட குழுவினர் ஆராய்ந்து 12 பேர்களை தேர்ந்தெடுத்து மத்திய அரசுக்கு அனுப்புகிறார்கள். துவக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அதில் 6 ஆசிரியர்களை மத்திய அரசு தேர்ந்தெடுக்கிறார்கள். உயர்நிலைப்பள்ளிகளைப் பொறுத்த வரையில் ஆறு ஆசிரியர்களை தேர்ந்தெடுத்து மத்திய அரசுக்கு அனுப்புகிறார்கள். அதில் அவர்கள் மூன்று ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இதில் தமிழ் ஆசிரியர்கள் யாரேனும் இருக்கிறார்களா என்ற விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் அறியலாம்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : அந்தமாதிரி தேசீய விருது பெற்ற ஆசிரியர்களைக் கௌரவிக்கும் ரீதியில் அவர்களின் புகைப்படங்களை அந்தந்தப் பள்ளிகளில் வைப்பதற்கு அரசு ஏதாவது உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசுக்கோ அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கோ செலவு ஏற்படாமல் வேறு வகையில் அந்தப் படங்களை வழங்குவதற்கு முன்வருவார்களானால் சில பல பள்ளிக்கூடங்களில் அதற்கு அனுமதி அளித்திருக்கிறது, அந்த முறையில் முயற்சி செய்யலாம்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : இந்த விருது பெறுகிற ஆசிரியர்கள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு இவ்வளவு என்று ஏதாவது விதி வைத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் 6, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் 3 என்று வைத்திருக்கிறார்கள்.

திரு. கா. வேழவேந்தன் : நம் அரசு தோன்றியதற்குப் பின்னால் காவல் துறையில் பணியாற்றுகிற சிறந்த காவலர்களுக்கு பரிசு வழங்கும் வகையில் ஆண்டுதோறும் அரசு சார்பில் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் சிறந்த முறையில் விழாக்கள் நடக்கின்றன. அதேபோல் கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் சிறந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு ஆண்டும் மிகப் பெரிய விழா நடத்தி அதில் அவர்களுக்கு பரிசளிக்கும் முறையில் விழா நடத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தத் திட்டம் ஏற்கனவே இருந்துவருகிறது. இதில் துவக்கப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்தும் இரண்டு ஆசிரியர்கள் வீதம் 45 கல்வி மாவட்டங்களிலிருந்து 90 ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்தது. துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாமல்—இது ஐந்தாறு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவருகிறது—சென்ற மூன்று நான்கு ஆண்டுக் காலத்தில் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் தரவேண்டுமென்று —ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் இரண்டு பேர்கள் என்ற முறையில் 90 துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வெள்ளிப் பதக்கம் ஒன்றும், அவர்களைப் பாராட்டி சான்றிதழ் ஒன்றும், ரூ. 200 தொகையும் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் மேதகு ஆளுநர் அவர்கள் தலைமையில் அவர்களால் இந்த விருதுகளும், பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.